இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 29-05-2023

# செங்கோல் ஏந்தும் அறம் எங்கே?

**அ**து சோழர் கால செங்கோலா? மடத்தில் தயார் ஆனதா? நகைக்கடையில் தயார் ஆனதா? அப்படி ஒரு வழக்கம் இருந்ததா? மவுண்பேட்டன் கொடுத்தாரா? அது அதிகார மாற்றத்தின் அடையாளமா? அப்படியானால் இப்போது நடப்பதும் அதிகார மாற்றமா? அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் அதிகாரம் மாறப் போகிறதா? இப்படி எத்தனையோ கேள்விகள் சுற்றிச் சுழல்கின்றன. வாட்ஸ் அப்களே வரலாற்று ஆதாரங்களாக ஆனபிறகு உண்மை வரலாறுகள் தங்களைத் தாங்களே தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

**கடந்த காலங்களைக் கல்லறையில் வைத்துவிட்டு நிகழ்கால நிதர்சன உண்மைகளைப் பேசுவது அறம் என்பதால், 'செங்கோல் ஏந்தும் அறம் எங்கே?' என்பதே நாம் எழுப்ப வேண்டிய கேள்வி.**

**செங்கோலை யாரும் கொடுக்கலாம். யாரும் தாங்கலாம். செங்கோலை அதன் தன்மையுடன் தாங்கும் கரம் வேண்டாமா? அந்தக் கரத்துக்கு அறம் வேண்டாமா? அந்தக் கரம் இருக்கிறதா? அந்த அறம் இருக்கிறதா?**

இதே தலைநகர் டெல்லியில் மல்யுத்த வீராங்கனைகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். பெண் வீராங்கனைகள் அவர்கள். தங்களது ஆற்றலால் இந்தியாவுக்கு பல பரிசுகளைப் பெற்றுத் தந்தவர்கள் அவர்கள். இப்போது வீதியில் அமர்ந்து இரண்டு மாத காலமாக போராடி வருகிறார்கள். அறமற்ற பா.ஜ.க. அரசும், அக்கட்சியின் தலைமையும் அதற்கு இதுவரை செவி சாய்க்கவில்லை. இந்த மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார் இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங். அவரும் இப்போது புதிதாக கட்டப்பட்டுள்ளதே நாடாளுமன்றம் அதில் அமரப் போகும் உறுப்பினர்தான். அதுவும் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர். பாலியல் தொல்லை கொடுத்தவர் பா.ஜ.க. எம்.பி.என்பதால் இதுவரை நடவடிக்கை இல்லை.

டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்திய மல்யுத்த வீரர்களை தாக்குகிறது காவல்துறை. மண்டையை உடைக்கிறது. 'நாங்கள் எங்களின் மதிப்பையும் மரியாதையையும் காக்கப் போராடுகிறோம். ஆனால் போலீஸ்காரர், பெண்களின் மார்பை பிடித்துத் தள்ளுகிறார்' என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். செங்கோல் வளைந்து கிடக்கிறது.

'உண்மை கண்டறியும் சோதனைக்கு நீங்கள் தயாரா?' என்று பா.ஜ.க. எம்.பி.கேட்டார். 'பாலியல் துன்புறுத்தல் விவகாரத்தில் உண்மை கண்டறியும் சோதனைக்கு நாங்கள் அனைவரும் தயார்' என்று மல்யுத்த வீராங்கனைகள் அறிவித்திருக்கிறார்கள். அதனை ஏற்றுக் கொண்டால் பா.ஜ.க. எம்.பி.யின் தலை உருளும். செங்கோலை நிமிர்த்தத் தயாராக இருக்கிறதா பா.ஜ.க. தலைமை? ஒற்றை மனிதரைக் காப்பாற்ற செங்கோல் உடைபட்ட காட்சியைத் தானே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

புதிய நாடாளுமன்றக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. திறப்பு விழா காண்கிறது. இது மக்களாட்சியின் மாண்பைக் காக்கும் நாடாளுமன்றமாகத் திகழுமா? அதானி விவகாரத்தில் கேள்வி மேல் கேள்வி கேட்டவர்களுக்கு இதுவரை பதில் சொல்லவில்லை. இனியாவது இந்த புதிய கட்டடத்திலாவது மாட்சிமை தாங்கிய பிரதமர் பதில் அளிப்பாரா?

**"2014 ஆம் ஆண்டு 8 பில்லியன் டாலராக இருந்த அதானியின் சொத்து மதிப்பு இப்போது 140 பில்லியன் ஆனது எப்படி? 2014 ஆம் ஆண்டு உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 609 ஆவது இடத்தில் இருந்தவர், 2022 ஆம் ஆண்டு இரண்டாவது இடத்தை பிடித்தது எப்படி? விமான நிலையம் என்றாலும் அதானி தான். துறைமுகம் என்றாலும் அதானி தான். இந்தியா முழுக்க அனைத்து மாநிலங்களிலும் அதானி தான். அவர் எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் நஷ்டம் அடைவது இல்லையே எப்படி? என்னைச் சந்திக்கும் மக்கள் அனைவரும் அதானிக்கும் பிரதமருக்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறார்கள். இவர்கள் இருவருக்குமான உறவு குஜராத் முதலமைச்சராக மோடி இருக்கும் காலத்தில் இருந்து தொடர்கிறது.**

**முன் அனுபவம் இல்லாதவர்கள் விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள இயலாது என்ற விதியைத் திருத்தினார்கள். அதானிக்கு 6 விமான நிலையங்கள் தரப்பட்டன. இஸ்ரேலுக்கு பிரதமர் செல்கிறார். அவருக்குப் பின்னாலேயே நடந்து அதானி செல்கிறார். உடனே இஸ்ரேல் இந்தியா இடையிலான அனைத்து தொழில்துறை ஒப்பந்தங்களும் அதானிக்கு வந்து விடுகிறது. இதே போன்று ஆஸ்திரேலியாவுக்கு பிரதமர் செல்கிறார். உடனே மாயமந்திரமாக எஸ்.பி.ஐ. வங்கி அதானிக்கு 1 பில்லியன் டாலர் கடன் வழங்குகிறது. வங்கதேசத்திற்கு மோடி முதல் முறையாக செல்கிறார். அங்கு மின் விநியோகத்திற்கான திட்டம் முடிவாகிறது. சில நாட்களுக்கு பின் வங்க தேசத்தின் மின்வாரியம் 25 ஆண்டுகளுக்கு மின் விநியோக உரிமையை அதானிக்கு வழங்குகிறது. 1500 மெகாவாட் மின்சார ஒப்பந்தம் அதானிக்கு கிடைக்கிறது. அங்கிருந்து இலங்கை செல்கிறார்.**

**ஜூன் 2022ல் இலங்கை காற்றாலை மின்உற்பத்தி உரிமத்தை அதானிக்கு வழங்க வேண்டும் என மோடி அழுத்தம் கொடுப்பதாக ராஜபட்சே சொன்னார். இதுதான் உங்கள் வெளியுறவுக் கொள்கை. இது இந்திய வெளியுறவுக் கொள்கை அல்ல. அதானியின் வெளியுறவுக்கொள்கை" என்று குற்றச்சாட்டுகளை பகிரங்கமாக வைத்து வருகிறார் ராகுல்காந்தி. இவற்றுக்கெல்லாம் புதிய நாடாளு மன்றத்திலாவது பதில் கிடைக்குமா?**

நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை கேட்கப்பட்டது. அது அமைக்கப்படவில்லை. உச்சநீதிமன்றம் ஒரு சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்தது. 'அதானி குழுமம் இதுபோன்ற மோசடியில் ஈடுபட்டதற்கான எந்தவிதமான முகாந்திரமும் கண்டறியப்படவில்லை' என்று அந்த நிபுணர் குழு அறிக்கை கொடுத்திருக்கிறது மே 20 ஆம் தேதி. சபாஷ்!

அதே நாளில் தான் 2000 ரூபாய் நோட்டுகளுக்கும் தடை விதிக்கப்பட்டது. மக்கள் 2000 ரூபாய் நோட்டுக்கான தடையைப் பற்றியே பேசிக் கொள்கிறார்கள். அதானி குழுமம் எந்த தவறும் செய்யவில்லை என்பதை மறந்துவிட்டார்கள். சபாஷ்!

**இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் ஒரு பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், ஒரு பெண் என்பதால் அவரை வைத்து புதிய கட்டடத்தை திறக்கக் கூடாது என்று முடிவெடுக்கிறது சனாதன மூளைகள். அந்த விவாதத்தை மறக்க வைக்கிறது செங்கோல் பெருமைகள்.**

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்கிறது சிலம்பு. அறியாது பிழை செய்த பாண்டியன் தன் உயிரைக் கொடுத்து நீதியை நிலைநாட்டிய காலம் இருந்தது.

'வல்வினை வளைத்த கோலை மன்னவன்

செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது' என்கிறார் இளங்கோவடிகள். வீண் புகாரை வென்று பூம்புகார் கண்டது அந்தக் காலம். புகார்களை மறைக்க செங்கோல்கள் தூக்குவது இந்தக் காலம்.

**'கோலின் செம்மையும் குடையின் தண்மையும்**

**வேலின் கொற்றமும்' விரைவில் அமையுமின்!**

# புல்லட் ரயிலில் டோக்கியோ சென்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## தமிழர்கள் திரண்டு உற்சாக வரவேற்பு!



சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் 25.5.2023 அன்று அரசுப் முறை பயணமாக ஒசாகா சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒசாகாவில் தனது இரண்டு நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று (28.5.2023) புல்லட் இரயில் மூலமாக டோக்கியோவிற்கு புறப்பட்டார்.



சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்திடவும் ஒசாகாவில் தனது இரண்டு நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு டோக்கியோ மாநகரத்திற்கு நேற்று (28.5.2023) புல்லட் இரயில் மூலமாக வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, டோக்கியோ இரயில் நிலையத்தில் ஜப்பான் நாட்டிற்கான இந்தியத் தூதர் சி.பி.ஜார்ஜ் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

**சென்னை, மே 29 -**

**ஒசாகா சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒசாகா வில் தனது இரண்டு நாள் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு நேற்று (28.5.2023) புல்லட் இரயில் மூலமாக டோக்கியோ சென்றடைந்தார்.**

**டோக்கியோ வருகைத் தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்திய தூதர் சிபி ஜார்ஜ் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். தமிழர்கள் திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர்.**

சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூரில் தொழில் அதிபர்களை சந்தித்து புரிந் துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டார்.

சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க வருமாறு அழைப்பு விடுத்தார்.

இதன் பிறகு ஜப்பான் நாட்டுக்கு சென்ற அவர் அங்குள்ள ஒசாகா நகரில் தொழில் அதிபர்களைச் சந்தித்து பேசினார்.

### தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைப்பு!

அந்நாட்டு தொழிற்சாலைகளையும் சென்று பார்வையிட்டார். ஜப்பான் தொழில் அதிபர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட அவர் அங்குள்ள தொழில் அதிபர்களை தமிழ் நாட்டில் தொழில் தொடங்க முன் வருமாறும் அழைப்பு விடுத்தார்.

சென்னையின் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு தொழில் தொடங்க முன்வர வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள், அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

### தமிழர் கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்பு!

மேலும் ஜப்பானில் வாழும் தமிழர்களையும் சந்தித்து பேசினார். அங்கு நடைபெற்ற கலாசார நிகழ்ச்சி களிலும் பங்கேற்று சிறப்பித்தார்.

ஒசாகா நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.5.2023) டோக்கியோ நகருக்கு செல்ல புல்லட் ரெயிலில் பயணம் மேற்கொண்டார்.

இதற்காக ரெயில் நிலையம் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை அங்குள்ள அதிகாரிகளும், ஊழியர்களும் மகிழ்ச்சி யுடன் வரவேற்றனர். அவருடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் அரசு அதிகாரிகள் சென்றனர்.

### இந்தியத் தூதர் வரவேற்றார்!

டோக்கியோ ரயில் நிலையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஜப்பான் நாட்டிற்கான இந்தியத் தூதர் சிபி ஜார்ஜ் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

இந்நிகழ்வின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

தனது புல்லட் ரெயில் பயணம் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ட்விட்டரில் பதிவு வெளியிட்டுள்ளார்.

அதில் கூறி இருப்பதாவது: ஒசாகா நகரிலிருந்து டோக்கியோவுக்கு புல்லட் ரெயிலில் பயணம் செய்கிறேன். ஏறத்தாழ 500 கி.மீ தூரத்தை 2 மணி நேரத்திற்குள் அடைந்து விடுவோம்.

உருவமைப்பில் மட்டுமல்லாமல் வேகத்திலும், தரத்திலும் புல்லட் ரெயில்களுக்கு இணையான ரெயில் சேவை நமது இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு வர வேண்டும். ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயனடைந்து, அவர்களது பயணங்கள் எளிதாக வேண்டும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அதில் குறிப்பிட்டு உள்ளார்.

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில்

# முதல்வரின் 'மஞ்சப்பை' திட்டத்துக்கு ஒன்றிய அரசு அதிகாரி பாராட்டு!

*சென்னை, மே 29-*

*சென்னை கிண்டி சிறுவர் பூங்காவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்துள்ள மஞ்சப்பை திட்டத்தை ஒன்றிய அரசு அதிகாரி பாராட்டினார்.*

*சுற்றுச்சூழல் விழிப்புணர்வு காலநிலை மாற்றத்தால் உலகம் வெப்பமயமாகி வருகிறது. இதன் தாக்கம் இந்தியாவிலும் அதிகரித்து வருகிறது. இதனால் ஏற்படப்போகும் விளைவுகளை உணர்ந்து மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை வாழ வேண்டும் என்று நாட்டு மக்களை பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறார்.*

*ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் கால நிலை மாற்றம் அமைச்சகம் சார்பில் நாடு முழுவதும் தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சென்னை கிண்டி சிறுவர் பூங்காவில் சுற்றுச்சூழலை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மத்திய அரசின் வனத்துறை உதவி ஐ.ஜி. கார்த்திக்கேயன் கலந்து கொண்டார்.*

*அவர், தண்ணீர், மின்சாரம் சேமிப்பு, ஆரோக்கியமான உணவு பழக்கம், பிளாஸ்டிக் தவிர்ப்பு போன்ற கருத்துக்களை உள்ளடக்கி 75 அம்சங்களுடன் கூடிய துண்டு பிரசுரங்களை கிண்டி சிறுவர் பூங்காவுக்கு வந்திருந்த பார்வையாளர்களுக்கு வழங்கி இதனை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பின்னர் அவரது தலைமையில் வனச்சரகர் கலைவேந்தன், வனவர் பாரதிதாசன் ஆகியோர் முன்னிலையில் பார்வையாளர்களும், கிண்டி சிறுவர் பூங்கா ஊழியர்களும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.*

*இந்த நிகழ்ச்சியில் வனத்துறை உதவி ஐ.ஜி. கார்த்திக்கேயன் பேசியதாவது: இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை நம்மை பாதுகாக்கும். சுற்றுச்சூழலுடன் இணைந்த வாழ்வியல் முறையை பழக்கப்படுத்தி கொள்ள வேண்டும். பழமையான வாழ்க்கை முறையை மீண்டும் கடைபிடிக்க வேண்டும். 'லிப்ட்' இருந்தாலும் நடந்து செல்ல வேண்டும். நடைபயிற்சிக்கு 'திரேட் மில்' பயன்படுத்துவதால் மின்சார தேவை ஏற்படுகிறது. எனவே பூங்கா போன்ற இடங்களில் நடை பயிற்சி செய்யலாம்.*

*தமிழ்நாடு முதல் அமைச்சர் கொண்டு வந்துள்ள 'மஞ்சப்பை' திட்டம் சிறப்பு வாய்ந்தது ஆகும். நான் சிறு வயதில் பள்ளிக்கு செல்லும் போது மஞ்சள் பைதான் எடுத்து செல்வேன். ஒரு முறை பயன்படுத்த கூடிய 'பிளாஸ்டிக்' பையை தவிர்த்து விடுங்கள். வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியியல் பூங்காவில் ஞாயிற்றுக்கிழமை (இன்று) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்ட விழிப்புணர்வு துண்டு பிரசுரம் ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்டிருந்தது. இதனை தமிழ் மொழியில் அச்சடித்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வனத்துறை உதவி ஐ.ஜி. கார்த்திக்கேயனிடம் வைக்கப்பட்டது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் உறுதியளித்தார்.*

## புதிய நாடாளுமன்றக் கட்டிடம் திறப்பு:

# தி.மு.க. உள்ளிட்ட 21 எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு!

**புதுடெல்லி, மே 29-**

**புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழாவினை காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 21 எதிர்க்கட்சிகள் புறக்கணித்துள்ளன.**

இந்திய மக்களுடனோ அல்லது எம்.பி.க்களுடனோ கலந்தாலோசிக்காமல், புதிய நாடாளுமன்றக் கட்டிடம், கட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முதல் பெண் பழங்குடியினத்தைச் சேர்ந்த குடியரசுத் தலைவர் என கொண்டாடிக் கொண்டு, மறுபுறம் அவரை முற்றிலுமாக ஒதுக்கி வைத்துவிட்டு, புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை தானே திறந்து வைக்கும் பிரதமர் மோடியின் முடிவு, ஜனநாயகத்தின் மீதான நேரடித் தாக்குதல் என விமர்சிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் முதல் குடிமகன் என்ற வகையில் புதிய நாடாளுமன்றத்தை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவே திறந்து வைக்க வேண்டும், ஆனால் அவரை அழைக்காததால், நாடாளுமன்ற கட்டிடத் திறப்பு விழாவை புறக்கணிப்பதாக காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 21 எதிர்க்கட்சிகள் ஏற்கனவே அறிவித்திருந்தன.

மக்களவை, மாநிலங்களவை என இரு அவைகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றத்தின் தலைவராக குடியரசுத் தலைவர் உள்ளதை அரசியல் சாசனம் தெளிவாக விளக்கி உள்ளது.

ஆனால், அவரை அழைக்காமல் விழா நடத்துவதற்கு கடும் கண்டனங்கள் தெரிவித்துள்ளது.

அதன்படி, முக்கிய எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இல்லாமலேயே புதிய நாடாளுமன்றக் கட்டிடம் திறக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாட்டின் பல்வேறு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டமும் நேற்று நடைபெற்றது.